DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 96/2024 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ராமச்சந்திரன்(இரண்டாம்நிலை காவலர்) |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.02.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தொண்டி காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.09.2024 தேதி காலை 10.00 மணியளவில் தொண்டி காவ்லநிலைய சார்பு ஆய்வாளர் விஷ்ணு தலைமையில் நானும் மு.நி.கா. 1215 கணேஷ் என்பவருடன் தொண்டி சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மது விலக்கு சம்மந்தமாக ரோந்து சுற்றி வரும்போது எங்களுக்கு கிடைத்தரகசிய தகவலின் படி தொண்டி புதிய பேருந்து நிலையம் அருகில் சாக்கு பையுடன் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரை

விசாரித்த போது அவர்தன் பெயர் ஆறுமுகம் த/பெ. வடக்கன் கிழவன்டி கிராமத்தை சேர்நத்வர் என்றும் கூறினார்.மேலும அவர் வைத்திருந்த சாக்குபையை சோதனை செய்த போது 180 மிலி Black pearl பிராந்தி பாட்டில்கள 10 எண்ணம் இருந்தன,

2. அந்த பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்ததாக கூறினார். அதை வைத்திருப்பதற்காக அரசு அனுமதி எதுவும் அவரிடம் இருக்கவில்லை. அதனால் அவரை காரண்ம் கூறி சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைது செய்தார்.அவர் வைத்திருநத பிராந்தி பாட்டில்களை தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் உள்ள என்னுடைய கையெழுத்து அ.சா,.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3.கைதுசெய்யப்பட்ட எதிரியுடனும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளுடனும் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.201/24 u/s 4(1)(c) TNP ACT படி வழக்கு பதிவுசெய்ய சார்பு ஆயவாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எதிரி மதுபாட்டில்களை சட்ட விரோதமாக விற்பனை செய்வதாக பொதுமக்கள் தகவல் தொடுததார்களா என்றால் சார்புஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. சார்புஆய்வாளர் ரகசிய தகவல் கிடைத்து எங்களை அழைத்து சென்றார் என்றால் சரிதான். எதிரியை நாங்கள் காலை 10 மணியளவில் பிடித்து விசாரித்தோம். அத்தாட்சி படிவத்தை சார்பு ஆய்வாளர் தான் தயார் செய்தார். அத்தாட்சியில் சாட்சியாக இருக்கும்படி பொதுமக்கள் யாரே எல்லாம் கேட்டோம் என்றால் சுமார் நான்கு பேரை கேட்டோம் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது.

2.அத்தாட்சி படிவத்தில் கைப்பற்றபட்ட மதுபாட்டில்களின் வரிசை எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு நினைவில் இல்லை சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை காவ்ல நிலையம் கொண்டு சென்றோம் என்றால் சரிதான்.அதன்பின் மதுபாட்டில்களை நீதிமன்றத்தில் வழக்கு சொத்தாக ஒப்படைத்தோமா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான்

சொன்னவாறு சொன்ன தேதியில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்து எனது உயர் அதிகாரிகளின் உத்தரவிற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.